



# நீங்கள் கனி கொடுப்பீர்கள்

சகோ. பிரேமா டேவிட்

உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால் இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள். மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள். யூதா வம்சத்தாரில் தப்பி மிந்திருக்கிறவர்கள் மாறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பார்கள். ஏசா 37:30,31.

கிறிஸ்துவில் அன்பான வாலிபதம்பி, தங்கைகளே, நானே மெய்யான திராட்சச்செடி என்றவரும், நாம் கனி கொடுக்க வேண்டு மென்பதற்காக கொடிகளாகிய நம்மை தம்மோடு இணைத்துக் கொண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

படிப்பு வரமாட்டேங்குது இதுவரை கிரேஸ் மார்க்குல தான் பாஸாகிக்கிட்டு வர்றேன். **Public exam, Competitive exam**-ல எல்லாம் எப்படி **Pass** ஆவேன், எத்தனை முறை படிச்சு, எவ்வளவு **effort** எல்லாம் **waste**, எத்தனை நாளைக்கு அம்மா, அப்பாவுடைய உழைப்பில சாப்பிடுறது, மற்றவருடைய உதவியையே எவ்வளவு நாளைக்கு எதிப்பார்த்திருக்கிறது?. ஒரு நேரம் அதை அவர்கள் அறிவுரையாக, கோபமாக சொல்லும் போது என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியடில்லையே. **Prayer Life**-ல யும் எழும்ப முடியல, எதையெடுத்தாலும் பலனை பார்க்கவே முடியல, என்னறக்கு, எப்போது எனக்கு உயர்வு வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறீர்களா?. இதுவரை யாராவது கொடுக்க மாட்டார்களா?, உதவமாட்டார்களா? என்றிருந்த நீங்கள் இனி தேவனுடைய தயவினாலும், உதவியினாலும் படித்து, உழைத்து பிரயாசப்பட்டு உயர்வடையப் போகிறீர்கள். கனி கொடுக்கப் போகிறார்கள். கனிகளைப் புசித்த நீங்கள், கனி கொடுக்கப்போகிறீர்கள். பலன்களை, பதில்களைப் பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள். கனி கொடுக்க நாம், நீங்கள் என்ன செய்ய வேண்டும்.

## கீழே வேர் பற்ற வேண்டும்
[கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்.]

நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும். நீதி 12:12 நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. யோவான் 15:5

ஒரு செடியோ, மரமோ கனிகொடுக்க சூரியஒளி, தண்ணீர், மாத்திரமல்ல அதின் வேர் நிலத்தில் நன்றாக ஊன்றியிருக்க வேண்டியது மிக அவசியம். அதுபோல நம்மையெல்லாம் படைத்த, நமக்காக சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவாலேயன்றி வேறு ஒருவராலும் நிரந்தரமான விடுதலையும், ஆசீர்வாதமும் நமக்கு கிடைக்கப் போவதில்லை என்பதால் நம்முடைய இருதயம் இயேசுவை நம்பி, அந்த நம்பிக்கையில் உறுதியாயிருப் பதைத்தான் வேர் பற்றுதல் நிலைத்திருத்தல் என்கிறோம்.

வேலை மற்றும் எதைச் செய்யும் முன்னும் ஆண்டவரே உங்களை நம்பி இதைச் செய்கிறேன், என்னை, என் திறமையை, பெருமையை நம்பவில்லை? நீங்க தான் எனக்கு உதவி செய்யனும். உமக்காக இந்த வேலைகளைச் செய்கிறேன் என்று செய்து பாருங்கள் நிச்சயம் அது வெற்றியாக முடியும். ஒரு ஜெபம் பண்ணுவது முதற்கொண்டு அவருடைய உதவியில்லாமல் செய்ய முடியாது, செய்யவும் கூடாது. கொடியானது தானாக கனி கொடுக்க முடியாது, செடியாகிய இயேசுவோடு நீங்கள் இணைக்கப்பட உங்கள் இதயத்தில் அவருக்கு இடம் கொடுக்கும் போது, அவரை கனப்படுத்தும் போது அவரும் உங்களோடு, உங்களுக்குள் இருப்பார்.

இன்றைய **Technology world**-ல நிறைய **Disturbance** உங்களுக்கு வரும்போது அதற்கு இடம் கொடுத்தால் உலர்ந்து போன செடி போலாவீர்கள். இயேசுவை நம்பியும் பலன் ஒன்னும் கிடைக்கலையே என்று சொல்லிக் கொண்டிருப்பீர்கள். இயேசு கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையும் நம்பி நீங்கள் அதில் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்கிறது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனி கொடுக்கும்படி உங்கள் உள்ளத்தையும், வாழ்க்கையையும் ஆண்டவர் சுத்தமாக்குவார். நீங்கள் சிக்கியிருக்கிற தீமைகளிலிருந்து விலகி பாதுகாக்கப்படுவீர்கள். யோவான் 15:1-8. நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவரில் வேர்கொண்டவர்களாக (கொலே 2:6) நடந்து கொண்டால் நிச்சயம் நீங்கள் தேவனுடைய நன்மையான கனிகளை பெற்றுக்கொண்டு, மற்றவர்களுக்கும் நன்மையின் வாய்க்காலாகவும் மாறுவீர்கள்.

## அதினதின் காலத்தில் கனி கொடுப்பீர்கள்

ஒரு வாலிபன் படித்து முடித்த மூன்று வருடத்தில் ஐந்து தொழில்களை தொடங்கி அதை மூடிவிட்டதைக் குறித்த கவலைப்பட்ட அவன் பெற்றோர் அவனை ஒரு துறவியிடம் அழைத்துச் சென்றனர். அந்த துறவி அவனை அங்கிருந்த தோட்டத்திற்கு அழைத்துச் சென்று ஒரு மாங்கொட்டையை அவன் கையில் கொடுத்து பள்ளம் தோன்றி நடச்சொன்னார். பிறகு இரண்டு மணி நேரம் கழித்து இருவரும் தோட்டத்திற்குச் சென்றனர். இந்த மாங்கொட்டை என்ன, இன்னும் வளரவே இல்லை அதைத் தோண்டி எடுத்து வேற இடத்தில் நடு என்று துறவி அந்த வாலிபனிடம் சொன்னார். இரண்டு மணி நேரத்தில் ஒரு செடி எப்படி வளரும் உங்களுக்கு என்ன பைத்தியமா என்று இந்த காலத்துப் பிள்ளைகளைப் போல சொல்ல வந்தும் சொல்லாமல் அவரை மதித்து வேறு இடத்தில் நட்டான். சாயங்காலமானது இரண்டு பேரும் தோட்டத்துக்கு போனார்கள். என்ன இது? இன்னும் பழங்களை தரவில்லையே அதைத் தோண்டி வேற இடத்தில் நடலாமா? என்று துறவி கேட்டதும் வாலிபனுக்கு வந்தது கோபம்! ஒரே நாளில் எப்படி துளிர்விட்டுக் காய்க்கும் என்றான்.

உடனே துறவி, ஒரு தொழிலை, ஒரு காரியத்தை ஆரம்பித்தால் அதை நன்கு வளர்க்க வேண்டும். அதற்காக கொஞ்ச நேரம் (**Time**) எடுக்கும் அதை நன்கு வளர்க்க, கிடைக்கும் வாய்ப்புகளை தேடிக் கண்டுபிடித்து பயன்படுத்தாமல் ஒன்றை மூடிவிட்டு அடுத்ததை தொடங்கலாமா என்றார். வாலிபனும் தன் தவறை உணர்ந்து புது தீர்மானத்தோடு நம்பிக்கையோடு கடந்து சென்றான்.உலகத்தில் பிறந்த, கர்த்தரை நம்பி நிலைத்திருக்கிற ஒவ்வொருவரைக் குறித்தும், உங்களைக் குறித்தும் ஒரு நோக்கத்தை தேவன் வைத்திருக்கிறார். அந்த நோக்கத்தை சிறுவயது படிப்பு, வேலை, திருமணம், ஊழியம் என்ற ஒவ்வொரு நிலையிலும் நிறைவேற்றும் போது அந்தந்த காலத்திற்கு ஏற்ற கனிகளைக் கொடுப்பதாக தேவன் ஏற்றுக்கொள்கிறார். மாற்கு 11:13-ல் இயேசு அத்தி மரத்தில் கனியைத் தேடி வந்து கனியை காணாதபோது ஏமாற்றத்தோடு அதை சபித்து விட்டு போகிறதைப் பார்க்கிறோம்.

லூக்கா 13:6-9 வரையிலுள்ள வசனங்களில் மூன்று வருடமாய் கனியைத் தேடியும் கனியைக் காணாத எஜமான் அதை வெட்டிப்போடச் சொல்லும்போது இது இந்த வருஷமும் இருக்கட்டும் கொத்தி எருப்போடுகிறேன். நிச்சயம் கனி கொடுக்கும் என்று மன்றாடும் தோட்டக்காரனைப் போலத்தான் ஆண்டவர் இயேசுவும் நம் தேவனுடைய மகிமைக்காக, நம்முடைய நன்மைக்காக அந்தந்தக் காலத்தில் கனிகளை, பலன்களை கொடுக்க வேண்டும் என்று பிதாவிடம் பரிந்து பேசி மன்றாடுகிறார். தமது பரிசுத்த ஆவியின் மூலம் ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கத்தை நமக்குத் தருகிறார். இதை நாம் அவரிடம் பெற்று உயர்வடையும் சாட்சியாக வாழவே தேவன் அவரில் நிலைத்திருக்கச் சொல்கிறார்.

மாம்சத்தின் கிரியைகளை, கனியற்ற கிரியைகளை இயேசுவின் நாமத்தில் ஜெயித்து, நீங்கள் நிச்சயம் உங்கள் வாழ்வில் கனி கொடுப்பீர்கள். (கலாத்தியர்6:17-26) யோசேப்பு கனிதரும் செடி அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனி தரும் செடி ஆதி 49:22. சொந்த சகோதரர்களால் குழியில் தள்ளப்பட்டு எகிப்தில் அடிமையாக, குற்றவாளியாக இருந்தாலும் இயேசுவைப் போல ஆவியின் கனிகளை அந்தந்த காலத்தில், இடத்தில் கொடுத்துக் கொண்டே இருந்தார். ஒரு அடிமை அரசாளும் அதிபதியாய் உயர்த்தப்பட்டார். யோசேப்பை உயர்த்தி கனி கொடுக்கச் செய்த தேவன் தாமே நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, உயர்வடைய கனி கொடுக்க உதவி செய்வாராக!.